
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, DECEMBER 20 2024

வெள்ளிக்கிழமை 20, டிசெம்பர் 2024 | ஒளி: 10 கதிர் 119 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## 2025 மார்ச்சில் சா/த பரீட்சை

கல்விப் பொதுத் தராதர சாதாரணத்தர பரீட்சை 2025 மார்ச் இல் நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வருடத்திற்கான பொதுப் பரீட்சை 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலில்

## 103 பேருடன் மியன்மார் படகு கரையொதுங்கியது

■ சண்முகம் தவசீலன்

முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் 103 வெளிநாட்டு பயணிகள் அடங்கிய படகொன்று வியாழக்கிழமை (19) கரையொதுங்கியது.

மியன்மாரில் இருந்து 103 பயணிகளுடன் பயணித்த படகே திசைமாறி வந்து கரையொதுங்கியுள்ளது. குறித்த படகில் 25 க்கும் மேற்பட்ட சிறுவர்களும் உள்ளனர். அவர்களை, முல்லைத்தீவு மீனவர்கள், கடற்படையினர், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் மீட்டு கரைக்கு கொண்டுவந்தனர்.

குறித்த படகில் இருப்பவர்களுக்கு உணவுகள், உலருணவுகளை முல்லைத்தீவு மீனவர் சங்கத்தினர் வழங்கினர். படகில் இருந்தவர்களில் சிலர் மயக்கமடைந்த நிலையிலும், சிலர் சுகயீனமுற்ற நிலையிலும் இருந்தனர். அவர்களுக்குத் தேவையான ஆரம்பக்கட்ட சிகிச்சைகளும் அளிக்கப்பட்டுள்ளன.





## “சந்திரிக்கா கால பட்டியல் விரைவில் வெளிவரும்”



ஜனாதிபதி நிதியத்தில் பணம் பெற்ற மற்றுமொரு குழுவினரின் ஆவணம் எதிர்வரும் காலங்களில் வெளியிடப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ வியாழக்கிழமை (19) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மத அவமதிப்பு வழக்கின் தீர்ப்பு நாளன்று சமூகமளிக்காமையால்

# ஞானசாருக்கு பிடியாணை



மத அவமதிப்பு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள கலகொட அத்தே ஞானசார தேரர், அவ்வழக்கின் தீர்ப்பு வியாழக்கிழமை (19) நீதிமன்றுக்கு சமூகமளிக்கவில்லை.

அந்த வழக்கு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது நீதிமன்றில் ஆஜராகாததால் அவரை கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கின் தீர்ப்பு வியாழக்கிழமை (19) அறிவிக்கப்பட இருந்த நிலையில், நீதிமன்றத்தில் ஞானசார தேரர் ஆஜராகவில்லை.

அவருக்கு சுகயீனம் ஏற்பட்டுள்ளதால் அவரால் நீதிமன்றில் ஆஜராக முடியாது என ஞானசார தேரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன, வழக்கின் தீர்ப்பை ஜனவரி 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அத்துடன், ஞானசார தேரரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## அர்ச்சுனா மீது அவதூறு வழக்குத் தாக்கல்

■ நிதர்ஷன் வினோத்



பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக அவதூறு வழக்கொன்றை யாழ்.மாவட்ட நீதிமன்றில் புதன்கிழமை (18) தாக்கல் செய்த யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி, 100 மில்லியன் ரூபாய் நட்டஈடுk; கோரியுள்ளார்.

குறித்த வழக்கு தொடர்பான கட்டாணை வழங்குவது தொடர்பாக யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் மேலதிக மாவட்ட நீதிபதி அ.அ.ஆனந்தராஜா முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தது.

இதன் போது மனுதாரர் சார்பில் சட்டத்தரணி த.தினேசன் அனுசரனையுடன், சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் ஏற்பாடாகியிருந்தது.

தொடர்ச்சி P2

## சான்றிதழ்களை கையளித்தார் சஜித்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்களினது கல்வித் தகைமைகள் தொடர்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது சகல கல்வித் தகைமைகளையும் புதன்கிழமை (18) பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

தொடர்ச்சி P2




## இந்தியா– இலங்கைக்கு டிஜிட்டல் ஒப்பந்தம்

தகவல் தொழிநுட்பத்தின் மற்றும் டிஜிட்டல் புத்தாக்கத்தில் முன்னணி வகிக்கின்ற இந்திய இலத்திரனியல் - அரச நிர்வாகம், நிதித் தொழிநுட்ப முறைமை, செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற துறைகளில் பெற்றுக் கொண்டுள்ள விசேட நிபுணத்துவ அறிவு பல்வித செயற்பாடுகள் மூலமாக இலங்கையில் டிஜிட்டல் அபிவிருத்திக்குப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை கிட்டியுள்ளது.

தொடர்ச்சி P2

## உப்பு இறக்குமதிக்கு அங்கிகாரம்



உப்பு இறக்குமதிக்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் கூடிய அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர், கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இலங்கையின் உப்பு உற்பத்தி நாட்டின் வீட்டுத் தேவைகளுக்கும் மற்றும் கைத்தொழில் தேவைகளுக்கும் நிலவும் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக போதுமானதாக அமைவதுடன், உப்பு விளைச்சல் குறிப்பாக காலநிலையில் தங்கியுள்ளது.

நாட்டில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக 2025 ஆண்டின் முதலாம் காலாண்டில் உள்நாட்டு சந்தையில் வீட்டுத் தேவைகளுக்கும் மற்றும் கைத்தொழில் தேவைகளுக்கான உப்பு விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்படலாமென அவதானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## உரத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படவில்லை

■ க. அகரன்


வவுனியாவில் பல விவசாயிகளுக்கு உரத்திற்கான கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வவுனியா மாவட்டத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற உரத்திற்கான கொடுப்பனவை இதுவரை வழங்கப்படாமையால் விவசாயிகள் தொடர்ந்து கடன் பெற வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

## தவறான திசையில் வாகனத்தை செலுத்தியவர் கைது

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் (E01) தவறான திசையில் வாகனத்தை செலுத்திய ஒருவரை அதிவேக நெடுஞ்சாலை பொலிஸாரால் புதன்கிழமை (18) கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2



முன்பள்ளி பிள்ளைகளின்

## காலை உணவு கட்டணம் அதிகரிப்பு

முன்பள்ளி பிள்ளைகளின் காலை உணவுக்காக வழங்கப்படும் கொடுப்பனவை அதிகரிப்பதற்காக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது

தற்போது ஒரு பிள்ளைக்கு நாளொன்றுக்கு 60 ரூபாய் வழங்கப்படுகிறது. 2025 ஆம் ஆண்டில் 155,000 பிள்ளைகள் பயனடையவுள்ளனர். சமகாலத்தில் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளமையால், ஒரு பிள்ளைக்கு நாளொன்றுக்கு ஒதுக்கப்படுகின்ற 60 ரூபாய் தொகை போதுமானதாக இன்மையால், குறித்த தொகையை 100 ரூபாவாக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இந்நிலையில், எடை குறைந்த பிள்ளைகள் அதிகமாகக் காணப்படுகின்ற முன்பள்ளிகள் எனும் அளவுகோலை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்படுகின்ற முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள்/ முன்பள்ளிகளின் குறித்த வேலைத்திட்டத்தைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கும்.



PAGE 1 தொடர்ச்சிகள்

# சான்றிதழ்களை கையளித்தார் சஜித்



இதன் பிரகாரம், வியாழக்கிழமை (19) முற்பகல் 11.40 மணியளவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது கல்வித் தகைமை தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆவணப் பத்திரங்களை பாராளுமன்ற ஹன்சாட் திணைக்களத்திடம் ஒப்படைத்தார்.



# உரத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படவில்லை

நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்ட கால பகுதியில் விவசாயிகளினால் உரத்திற்கான பதிவுகள் அனைத்தும் கமக்கார அமைப்புகளின் ஊடாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

எனினும் வவுனியாவில் உள்ள பல விவசாயிகளுக்கு இதுவரை கொடுப்பனவு கிடைக்கப்பெறாத நிலை காணப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கம் இம்முறை உரக் கொடுப்பனவாக ஹெக்டெயருக்கு 15,000 ரூபாவிலிருந்து 25,000 ரூபாவாக கொடுப்பனவை உயர்த்தி இருந்த போதிலும் கூட உரத்தை கொள்வனவு செய்வதற்கு விவசாயிகள் தொடர்ந்து கடன் பெற வேண்டிய சூழலில் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# பொலிஸாருக்கு வாகனங்கள் வாங்க இந்தியா நிதியுதவி




இலங்கை பொலிஸாருக்கான வாகன தேவைகளை பூர்த்தி செய்வதற்கு 300 மில்லியன் இலங்கை ரூபாயை மானியமாக வழங்க இந்திய அரசாங்கம் இணங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

இந்த உதவித்தொகையை பயன்படுத்தி வடக்கு மற்றும் கிழக்கு பொலிஸ் நிலையங்களின் கடமை தேவைகளுக்காக கெப் வண்டிகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த நன்கொடையை பெற்றுக்கொள்வதற்காக இரு தரப்புக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கு பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

# இந்தியா– இலங்கைக்கு டிஜிட்டல் ஒப்பந்தம்

இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரத்தை டிஜிட்டல் பொருளாதார அமைச்சு மற்றும் இந்தியாவின் இலத்திரனியல் மற்றும் தகவல் தொழிநுட்ப அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு இருதரப்புக்கும் இடையிலான ஆரம்ப உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

அதன்மூலம், டிஜிட்டல் அபிவிருத்தித் துறையில் அதிகாரிகளின் இயலளவு விருத்திக்கும் மற்றும் டிஜிட்டல் அபிவிருத்தித் தீர்வுகளை நடைமுறைப்படுத்தும் போது இரு நாடுகளுக்கிடையிலான நிறுவன ரீதியான ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவதற்கான இயலுமை கிட்டியுள்ளது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு டிஜிட்டல் பொருளாதார அமைச்சராக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# உப்பு இறக்குமதிக்கு...

அதற்குத் தீர்வாக தயார் செய்து சந்தைக்கு விநியோகிப்பதற்கான தீர்வை வரி வீதத்திற்கமைய பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குமாறு உப்பு உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

அதற்கமைய, பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெட்ரிக் தொன் உச்ச அளவுக்கு உட்பட்ட உப்பை 2025-01-31 திகதி அல்லது அதற்கு முன்னர் வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக (பலநோக்கு) கூட்டுத்தாபத்தின் மூலம் இறக்குமதி செய்து உள்நாட்டு உப்பு உற்பத்தியாளர்கள் ஊடாக சந்தைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# தவறான திசையில் வாகனத்தை செலுத்தியவர் கைது



இதனை அதிவேக நெடுஞ்சாலை நடவடிக்கை, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு உறுதிப்படுத்தியது.

மனநலம் குன்றிய ஒருவரை சிகிச்சைக்காக ஏற்றிக்கொண்டு மத்தலயிலிருந்து கொட்டாவ நோக்கிச் சென்ற கார் வெலிப்பென்ன தெற்கு அதிவேக நெடுஞ்சாலை சேவைப் பகுதியில் நிறுத்தப்பட்டது.

வாகனத்தை ஓட்டிச் சென்ற நபர், ஓய்வறையைப் பயன்படுத்துவதற்காக நிறுத்தியதாக பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சாரதி, கழிவறையைப் பயன்படுத்துவதற்காக காரை விட்டு வெளியேறிய சிறிது நேரத்திலேயே, மனநலம் குன்றிய நபர் தனது குடும்ப உறுப்பினர்களுடன் காரை மாத்தறை நோக்கி அதிவேக நெடுஞ்சாலையில் தவறான திசையில் ஓட்டிச் சென்றுள்ளார். இதனால் ஏனைய வாகன சாரதிகளுக்கு பெரும் அசௌகரியம் ஏற்பட்டது.

கார் தவறான திசையில் மாத்தறை நோக்கி சுமார் ஐந்து கிலோமீட்டர் தூரம் பயணித்தது. பின்னர், குருந்துகஹஹெதெக்ம இடமாறலில் அதிவேக நெடுஞ்சாலை பொலிஸார் காரை நிறுத்தி வாகனத்தை செலுத்தி வந்த நபரை கைது செய்தனர்.

நிலைமையை ஆராய்ந்த பின்னர், பொலிஸார், காரை விடுவித்து, நோயாளிக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை அளிக்குமாறு சாரதிக்கு அறிவுறுத்தினர்.

இச்சம்பவத்தின் போது விபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

# 3 வினாக்கள் கசிந்த விவகாரம்: இரகசிய அறிக்கை கையளிப்பு

ஐந்தம் தர புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளில் பகுதி I வினாத்தாளில் மூன்று கேள்விகள் கசியவிட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளின் விரிவான தகவல்கள் அடங்கிய இரகசிய அறிக்கையை குற்றப் புலனாய்வு திணைக்கள பணிப்பாளர் உயர் நீதிமன்றில் வியாழக்கிழமை (19) கையளித்துள்ளார்.

செப்டம்பர் 15ஆம் திகதி நடைபெற்ற 5 வருட புலமைப்பரிசில் பரீட்சையின் பகுதி I வினாத்தாளை இரத்து செய்து அதற்கான பரீட்சையை மீண்டும் நடத்துமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கக் கோரி நான்கு அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட உத்தரவுக்கு அமைய, புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திருமதி. இமேஷா முத்துமாலி, அது தொடர்பான அறிக்கையை கையளித்தார்

இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களான யசந்த கோதாகொட, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய அமர்வு முன் பரிசீலிக்கப்பட்டது.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர் குழுவொன்றின் பெற்றோர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட சிலர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் வினாக்கள் சில, முன்கூட்டியே வெளியிடப்பட்டமை தொடர்பான விசாரணைகளின் விரிவான அறிக்கையை வியாழக்கிழமை (19) காலை 9.00 மணிக்கு முன் சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு உயர் நீதிமன்றம் புதன்கிழமை (18) உத்தரவிட்டிருந்தது.

இது தொடர்பான அறிக்கையை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம், இந்த மனுக்கள் தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் 11ம் திகதி அறிவிக்கப்படும் என அறிவித்துள்ளது.

# "சந்திரிக்கா கால பட்டியல் விரைவில் வெளிவரும்"

2005ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அரசியல்வாதிகள் பெற்ற பணம் குறித்த ஆவணத்தை மாத்திரமே முன்வைத்ததாக தெரிவித்த அமைச்சர், சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் இவ்வாறு பணம் எடுத்தவர்கள் இருந்ததாக தெரிவித்தார்.

இதே நிதியில் இருந்து முன்னாள் மாகாண சபை அமைச்சர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தவிசாளர்களும் பணம் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிதியில் இருந்து சாதாரண ஒருவருக்கு ஐந்து இலட்சம் ரூபாவை வழங்கும் போது தவணை முறையில் வழங்கப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார். ஆனால் அந்த நூறு லட்சம் ரூபாய் தவணை முறையில் வழங்கப்படவில்லை என்றும் கூறினார்.



இது உண்மையாகவே தார்மீகக் கேள்வி எனத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர், அதிகாரத்தை தம் கையில் வைத்துக்கொண்டு பெரும் கரண்டியால் தமக்கே பகிர்ந்தளித்துள்ளனர் எனவும், இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் வியாழக்கிழமை (19) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இந்த தகவல்களை வெளியிட்டார்.

# அர்ச்சுனா மீது அவதூறு வழக்குத் தாக்கல்

மனுதாரரான வைத்திய நிபுணர் சத்தியமூர்த்தி தடுப்புக் காவலில் இருந்த போது அங்கு அவருக்கு நிகழ்ந்த விடயங்கள் தொடர்பில் அவருக்கு ஆவதூறாக பிரதிவாதியான வைத்தியர் இராமநாதன் அசர்ச்சுனாவினால் சொல்லப்பட்ட விடயங்கள் மற்றும் 09.12.2024 அன்று இராமநாதன் அர்ச்சுனா வைத்தியசாலைக்குள் நுழைந்து வைத்திய நிபுணர் சத்தியமூர்த்தியுடன் சில வார்த்தை பிரயோகங்களை மேற்கொண்டு, அவருடன் பிணக்கிற்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பிலும், அன்றைய தினத்தில் இராமநாதன் அர்ச்சுனா தன்னுடைய முகப்புத்தகத்தில் வெளியிட்ட காணொளி ஊடாக அவதூறு பரப்பப்பட்டதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.



பிரதிவாதியான இராமநாதன் அர்ச்சுனா, வைத்திய நிபுணர் சத்தியமூர்த்திக்கு எதிராக, அவருடைய மாண்பு மற்றும் கீர்த்திக்கு பங்கம் விளைவிக்கும் கருத்துக்களை தொடர்ந்து தெரிவிப்பதாகவும் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

அவரால் கூறப்படும் கருத்துக்களில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்பதோடு அடிப்படை அறமற்ற நபர் ஒருவருடைய கருத்தாகும் என்று வழக்காளி சத்தியமூர்த்தி தனது சத்தியக்கூற்றிலே தெரிவித்திருந்தமை தொடர்பில் சட்டத்தையும், நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்புகளையும் சுட்டிக்காட்டி நீண்ட சமர்ப்பணம் மனுதாரர் தரப்பில் மன்றில் முன்வைக்கப்பட்டது.

மேலும் மனுதாரர் தனது சத்தியக் கூற்றிலேயே தனது நோக்கம் பிரதிவாதியான இராமநாதன் அர்ச்சுனா பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலே, குடிமகன் என்ற வகையிலே அல்லது பொது நிறுவனங்களை பொறுப்புக்கூற வைக்க வேண்டும் என்ற நியாயமாக செயல்படும் இடத்து, அவற்றுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றும் பொய்யான வகையிலும், அவதூறான வகையிலும் அவரால் முன்வைக்கப்படும் கருத்துக்கள் தொடர்பாக கட்டளை ஆக்கப்பட வேண்டும் என கோரப்பட்டிருந்தது.

குறித்த விடயங்களை செவிமடுத்த நீதிபதி, மனுதாரரால் கோரப்பட்டவாறு, அவருக்கு எதிராக அவதூறான கருத்துக்கள் எதையும் தெரிவிக்க கூடாது என பிரதிவாதியான இராமநாதன் அர்ச்சுனாவிற்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது ஒரு முகமாக மனுதாரர் தரப்பை மட்டும் கேட்டு வழங்கப்படும் கட்டாணை என்பதால், இது தொடர்பான அறிவித்தல் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

கட்டாணை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை வலிதாக இருக்கும். அன்றைய தினம் அதனை நீடிப்பதா இல்லையா? என்பது தொடர்பான தீர்மானத்தை நீதிபதி எடுப்பார்.

இது தொடர்பில் பிரதிவாதியான இராமநாதன் அர்ச்சுனாவிற்கு கட்டளையின் பிரதியையும், அறிவித்தலையும் வழங்குமாறு மன்று கட்டளையிட்டுள்ளது.

# மற்றொருவரின் எம்.பி பதவியை சவாலுக்கு உட்படுத்தி ரிட்மனு

மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினரின் எம்.பி பதவியை சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் டாக்டர். உபாலி பன்னிலகே, பாராளுமன்ற உறுப்பினராக (எம்.பி) பதவி வகிக்கத் தகுதியற்றவர். எனவே அவர் அமைச்சராகவும் பதவி வகிக்க தகுதியற்றவர் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரிட் மனுவில், அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக அறிவிக்கப்பட்டதன் பின்னரும் மற்றும் அமைச்சரவை அமைச்சராக நியமிக்கப்பட்ட போது அவர் ருஹுணு பல்கலைக்கழகத்தில் பணியாளராக இருந்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவை சமூக மற்றும் அரசியல் செயற்பாட்டாளர் ஓஷல ஹேரத் தாக்கல் செய்துள்ளார். மதுவில், அமைச்சர் டாக்டர். உபாலி பன்னிலகே (முதல் பிரதிவாதி), பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி அனுஷா ரோஹணதீர, ருஹுணு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர். சுஜீவ அமரசேன, ருகுணு பல்கலைக்கழகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை , பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார்.

டாக்டர். உபாலி பன்னிலகே, பொதுக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரியாக இருப்பதால், அரசியலமைப்பின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கோ அல்லது பாராளுமன்றத்தில் அமர்ந்து வாக்களிப்பதற்கோ தகுதியற்றவர்.

முதல் பிரதிவாதி பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதாகவும், இந்த நிலைப்பாட்டின் காரணமாக, பொதுக் கூட்டுத்தாபனமான ருஹுணு பல்கலைக்கழகத்தின் அதிகாரியாக கடமையாற்றியபோதே அமைச்சரவை அமைச்சராக நியமிக்கப்பட்டதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். முதல் எதிர்மனுதாரருக்கு அரசாங்கத்தின் சார்பில் ஒப்பந்தம் உள்ளதால், இது நலன் முரண்பாட்டை உருவாக்குகிறது என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# "அஸ்வெசுமவுக்கு இலகு ஏற்பாடு"

■ எஸ்.சதீஸ்

அஸ்வெசும உதவித்தொகையை பெற தகுதி பெற்றும் இதுவரையும் வங்கியில் வைப்பிலிட ப்பட்ட கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள முடியாதவர்களுக்கு இலகுவாக பெற்று கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தியின் கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் வழிகாட்டலுடன் மக்களுக்கு மேலும் நலன் சேர்க்கும் வகையில் மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்ட அஸ்வெசும நலத்திட்டங்களை பயனாளிகளுக்கு பயனை அடைந்து கொள்ள முடிவதோடு அடையாள அட்டை இன்றி வங்கியில் முடக்கப்பட்ட பணத்தை பெற்றுக் கொள்வதில் குறிப்பாக எமது மலையக மக்கள் பல்வேறு தடங்கல்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளார்கள்.

குறித்த கொடுப்பனவுகளை வங்கியில் இருந்து பெற்றுக் கொள்வதற்கான உங்கள் பிரதேச கிராம உத்தியோகத்தர் ஊடாக தற்காலிக அடையாள அட்டை ஒன்றை பெற்றுக் கொள்வதன் மூலம் தடையின்றி பெற்று கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.



# கான்ஸ்டபிளை போத்தலால் தாக்கிய சாரதி கைது



விடுதி ஒன்றில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது மதுபான போத்தலை உடைத்து கான்ஸ்டபிள் ஒருவரை தாக்கிய முச்சக்கர வண்டி சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக ஹொரண பொலிஸார் தெரிவித்தனர்.

மொரகஹஹேன பொலிஸில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே சம்பவத்தில் காயமடைந்து ஹொரண வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் புதன்கிழமை (18) கடமை இடைவேளையை அறிவித்துவிட்டு ஹொரண விடுதிக்கு மது அருந்துவதற்காக வந்துள்ளதுடன் அங்கு மேற்படி சந்தேக நபருடன் ஏதோ ஒரு சம்பவம் தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஹொரண பிரதேசத்தை சேர்ந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# காட்டு யானை சடலமாக மீட்பு

■ எம்.எஸ்.எம்.ஹனீபா



கனகர் கிராமம் ஊரணி பகுதியில் காட்டு யானை ஒன்று உயிரிழந்த நிலையில் புதன்கிழமை (18) காலை மீட்கப்பட்டுள்ளது.


பயிர் செய்யும் தோட்டம் ஒன்றுக்கு அருகாமையில் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ள நிலையிலேயே 45 வயது மதிக்கத்தக்க குறித்த யானை மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 53 வயதான நபரொருவரை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கைது செய்து பொத்துவில் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயிலில் மோதி குடும்பஸ்தர் பலி

■ எஸ்.கணேசன்



திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை பகுதியில் ரயிலில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் வியாழக்கிழமை (19) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கொட்டகலை கங்கைபுரத்தை சேர்ந்த வெள்ளசாமி ஜெயகுமார் (வயது 40) திருமணமான ஒரு பிள்ளையின் தந்தை என பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொட்டகலை ரயில் நிலையத்திற்கு அருகாமையில் கொழும்பில் இருந்து பதுளை நோக்கி சென்று கொண்டிருந்த இரவு நேர ரயிலில் மோதுண்டு குறித்த நபர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் கொட்டகலை ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு வைத்திய பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக ரயில் நிலையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த நபர் தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது ரயிலில் மோதுண்டு இறந்தாரா? என்பது தொடர்பாக பத்தனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மணல் கடத்திய வாகனம் மீது துப்பாக்கிச் சூடு

■ எஸ்.தில்லைநாதன்



மணல் கடத்திச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்றை பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு கைப்பற்றியுள்ளனர்.

யாழ். வடமராட்சி, வல்லிபுரம் பகுதியில் சட்டவிரோத முறையில் மணல் அகழ்ந்துச் சென்ற டிப்பர் வாகனத்தை பருத்தித்துறை பொலிஸார் வல்லிபுரம் - ஆனைவிழுந்தன் வீதியில் வைத்து நிறுத்துமாறு கோரிய போதும் அது நிறுத்தாதமையால் டிப்பர் வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டு அதைக் கைப்பற்றியுள்ளனர்.

புதன்கிழமை (18) இடம் சம்பவத்தில், கடத்தல்காரர்கள் தப்பியோடிய நிலையில், டிப்பர் வாகனம் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# விபச்சார விடுதி சுற்றிவளைப்பு

ஆயுர்வேத ஸ்பாக்கள் என்ற போர்வையில் இயங்கி வந்த இரண்டு விபச்சார விடுதிகள் கல்கிஸை கடற்கரை வீதியிலும் மலிபன் சந்திக்கு அருகாமையிலும் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கல்கிஸை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளை அடுத்து 5 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் மாத்தளை, யக்கலமுல்ல, மாவனெல்ல, பெந்தர மற்றும் பாணந்துறை பிரதேசங்களை வசிப்பிடமாக கொண்ட 24 - 43 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விலங்குகளுக்கும் எலிக்காய்ச்சல்?

வடக்கு மாகாணத்தில் தற்போது பரவியுள்ள எலிக்காய்ச்சல் மனிதர்களுக்கு மட்டுமன்றி பல்வேறு விலங்குகளுக்கும் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்தி திணைக்களகத்தின் மாகாண பணிப்பாளர் வைத்தியர் எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார்.

எலிக்காய்ச்சல் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு திருநெல்வேலியில் உள்ள கால்நடை சுகாதார உற்பத்தி திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (19) காலை இடம்பெற்றதுடன் இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

"இந்நோயானது லெப்றரோஸ்பைரா எனப்படும் ஒரு வகை பாக்டீரியாவினால் ஏற்படுத்தப்படுகின்ற தொற்று நோயாகும். இதனால் பாதிக்கப்பட்ட எலிகளின் சிறுநீரில் குறித்த பாக்டீரியாக்கள் வாழும்.

எலியின் சிறுநீர் மற்றும் மலம் மூலம் வெளியேறும் இப் பாக்டீரியாவானது மழைக்காலங்களில் மழைநீர் மற்றும் வெள்ளத்தில் கலந்து அயற்புறங்களுக்கு பரவும்.

மழை காலங்களில் குடிநீர் கிணறுகளில் கூட தொற்றுக்கிருமிகள் கலக்கக்கூடும். தொற்றடைந்த நீரை பருகுவதாலோ அன்றி காயமுற்ற தோல், கண், வாய் போன்ற பகுதிகளில் தொடுகை உறும் வேளைகளில் குறித்த பாக்டீரியா உடலில் ஊடுருவிச் செல்லும் வாய்ப்புள்ளது.

இதே பாக்டீரியாக்கள் நாய், ஆடு, மாடு, பன்றி போன்ற வளர்ப்பு மிருகங்களில் கூட நோயினை ஏற்படுத்திவிடும் வாய்ப்புகள் உண்டு. இவ் விலங்குகளின் மலம், சிறுநீர் போன்ற கழிவுகளில் இந் நோய்க்கிருமி வெளியேறி இவ் விலங்குகள் வாழும் சூழலில் நெருங்கி பழகும் மனிதனிலும் இந் நோய் கிருமி பரவி நோய் பாதிப்பை ஏற்படுத்தலாம் என தெரிவித்துள்ளார்.

# வருடாந்த ஒளி விழா





நாட்டின் பல பிரதேசங்களிலும் ஒளி விழாக்கள் மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்று வருகின்றன.

தமிழ் மிரர் நிருபர்கள்
















# ஜனாதிபதி நிதியத்தில் கோடிகளை சுரண்டிய பல அரசியல்வாதிகள்

1978 ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் பதவியேற்பை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆரம்ப வைபவத்தின்போது பொது நல விரும்பிகளின் நிதிசார் பங்களிப்புடன் 237,120 ரூபாய் கொண்ட ஆரம்ப மூலதனத்தினால் ஜனாதிபதி நிதியம் ஆரம்பிக்கப்பட்டது.

வறுமை ஒழிப்பு, கல்வி அல்லது ஞானத்தின் வளர்ச்சி,மதங்களின் எழுச்சிக்கு பங்களிப்பு செய்தல், நாட்டுக்கு சேவையாற்றியவர்களுக்கு விருதுகள் வழங்கல், ஜனாதிபதி மற்றும் ஆட்சிமன்றக்குழு குழுவின் கருத்துப்படி, பொதுமக்களின் நலனுக்கான பணிகளை செய்தல் ஆகியன பிரதான குறிக்கோள்களாகும். .

இவை மட்டுமின்றி, பல்வேறு நோய்களுக்கான மருத்துவ உதவி,மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வறுமை ஒழிப்புத் திட்டம், மஹாபொல புலமைப்பரிசில் திட்டம்,க.பொ.த (உ/த) விசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குதல், க.பொ.த (சா/த) விசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கு (உ/த) கற்பதற்கான புலமைப் பரிசில் வழங்குதல், மத சீர்திருத்தம் மற்றும் கட்டுமான பணிகளுக்காக மானியங்கள் வழங்குதல், ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்படும் 'பெரஹெரா' மற்றும் பிற கலாச்சார நடவடிக்கைகளுக்கு நிதி உதவி வழங்குதல், தனிநபர்களின் நலனுக்காக ஜனாதிபதி நிதியம் என்ற பெயரில் அரசு வங்கிகள் மற்றும் பொது அறங்காவலர் திணைக்களத்தில் பராமரிக்கப்படும் கணக்குகள், ஜனாதிபதி மற்றும் செயற்குழுவின் விருப்பப்படி வழங்கப்படும் நன்மைகள் என்பன ஜனாதிபதியின் நிதியத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளாகும்.

இந்த ஜனாதிபதி நிதியத்துக்கு, அபிவிருத்தி லொத்தர் சபை மற்றும் பொதுமக்கள் நன்கொடைகள் என்பனவே நிதி மூலங்களாக இருந்தன. இந்த நிதியின் மூலம் வழங்கப்பட்ட மருத்துவ உதவி மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. ஜனாதிபதி நிதியமானது நோய்களுக்கான சிகிச்சைக்கு பணம் வழங்கும் நிறுவனமாக மக்களுக்கு தெரியும். ஆனால் இந்த நிறுவனத்தில் பணம் பெற பல ஆவணங்கள் தேவை. நோயாளியின் வருமானத்தைப் பின்பற்றும் சூத்திரத்தின் மூலம் இந்த நிதி நோயாளிக்கு பணத்தை வழங்குகிறது.

2005 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பல கோடி ரூபாய், முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க முதற்கோலாசான் நலிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்றத்தில் அம்பலப்படுத்தினார்.

பல்வேறு அரசாங்கங்களில் 13 அமைச்சர்கள் அந்த நிதியில் இருந்து எந்த இழப்பீடு கிடைக்காமல் பணம் எடுத்துள்ளனர். ஒரு ஏழைக்கு ஜனாதிபதி நிதியில் இருந்து இரண்டரை இலட்சம் ரூபாய் கிடைப்பது மிகவும் கடினம். ஜனாதிபதி நிதியத்தின் ஊழியர்கள் இந்த பணத்தை கூடிய விரைவில் மற்றும் அதிகபட்ச வெளிப்படைத்தன்மையுடன் வழங்குவார்கள். ஆனால், 300 இலட்சம், 100 இலட்சம் போன்ற பணம் இந்த நாட்டில் உள்ள அரசியல்வாதிகளால் எடுக்கப்பட்டுள்ளது.

இதனால், கடந்த காலங்களில் ஜனாதிபதி நிதியத்தின் நிதி வளம் கரைந்து போனது. ஒரு ஏழை, இதய அறுவை சிகிச்சைக்கு பணம் பெற நிறைய நேரம் செலவிட்டான். நம் நாட்டில் உள்ள பெரும்பாலான அரசியல்வாதிகள் வெட்கமே இல்லாதவர்கள் என்பது சரியானதாக இருக்கும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

மரணம் வாழ்வின் முடிவு அல்ல; ஒருவர் இறந்துபோனால், அவர் தொலைந்து போவதில்லை. நல்லோர் மறைந்தால் புக ழப்படுகின்றார்கள். தீயவர்களை மக்கள் திட்டுகின்றார்கள்.

மொத்தத்தில், இறந்த பின்னரும் ஆராயப்படும் நபர்களாகின்றனர். இதுதான் உண்மைநிலை. வாழ்க்கைய வெறுத்து தங்கள் இன்னுயிரைத் துறந்தால், அது வாழ்வின் முடிவு என்கின்றோம். அப்படி இறப்பவர்கள் துரதிர்ஷ்டசாலிகள்.

வாழ்க்கையை முடித்தால், அதனால் அவர் செய்த சாதனைகள் என்ன என, எத்தனை பேர் கவலைக்கு உட்படுத்துகின்றார்கள். ஒருவரின் இழப்பு அவர் சார்ந்தவர்களுக்கு வரும் பாதிப்பு கொஞ்சநஞ்சம் அல்ல! துன்பத்தை வழங்குபவர் மனச்சாட்சி அற்றவன்.

நீண்ட வாழ்வை கத்தரிக்கலாகாது. இறப்பினால் பிரச்சினைகள் தீர்வதும் இல்லை; வளரும்.

நிரந்தர வாழ்வு வாழ முடியும்ட. உண்மைகயாக வாழ்பவன் உலகையே உயிர்ப்பிப்பான்.

பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 31

# அபிவிருத்தியின் இராணுவமயமாக்கல் – 2



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் போருக்குப் பிந்தைய அபிவிருத்தி என்பது இராணுவமயமாக்கல் செயல்முறையாக வடிவமைக்கப்பட்டது. அதற்கு மேற்குலக நாடுகளின் முழுமையான ஆசீர்வாதம் கிடைத்தது. ஒருபுறம் மனித உரிமைகள் குறித்த வினாக்களை சர்வதேச அரங்கில் இலங்கைக்கு எதிராக எழுப்பிய நாடுகள், நாட்டுக்குள் அரசாங்கத்தின் அபிவிருத்தி-இராணுவம் என்ற கூட்டிணைவுக்கு ஆதரவாக இருந்தன. இந்த வகையில் போருக்குப் பின்னரான நாட்டின் வடக்குக் கிழக்கின் அபிவிருத்தி சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்துடன் இராணுவமயமாக்கல் செயன்முறையின் பகுதியாக அரங்கேறியது.

2015 டிசெம்பரில் இலங்கைக்கு விஜயம் செய்ய அமெரிக்க அரசாங்கத்தின் அரசியல் அலுவல்களுக்கான துணைச் செயலாளர் தோமஸ் செனான் பின்வருமாறு கூறினார்: அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் அணுகுமுறையை அமெரிக்கா மெச்சுகிறது. உங்கள் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கும், உங்கள் மக்களை நல்லிணக்கப்படுத்துவதற்கும் நீங்கள் பெற்ற வெற்றியானது, உலகெங்கிலும் ஒரு முன்மாதிரியாக இருக்கும். இந்த முயற்சியில் ஒரு பங்காளியாக இருப்பதில் அமெரிக்கா பெருமிதம் கொள்கிறது,இலங்கையின் நட்பு நாடாக இருப்பதில் பெருமை கொள்கிறது". இந்தக் கூற்று இராணுவ வெற்றியின் பின்னர் அரசின் அபிவருத்தி-இராணுவ ஒருங்கிணைப்புக்கு எவ்வாறு மனித உரிமைக் கதையாடல்கள் சேவை செய்தன என்பதை பிரதிபலிக்கின்றன.

இலங்கை அரசாங்கத்தின் இராணுவமயமாக்கல் செயல்முறையானது, பொதுமக்களின் பரந்த நிலப்பரப்புகளை பெரிய அளவிலான கையகப்படுத்துதலுடன் உள்ளார்ந்த வகையில் பின்னிப்பிணைந்தாக அமைந்தது. வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மொத்த நிலப்பரப்பின் 18,000 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில், 7,000 சதுர கிலோமீற்றரை பாதுகாப்புப் படையினர் கையகப்படுத்தினர். சிங்கள ஆளும் உயரடுக்கின் ஒத்துழைப்புடன் கொலனித்துவ அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட 1935 ஆம் ஆண்டின் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் அடிப்படையில் இராணுவத்தால் காணிகளை கையகப்படுத்தியதை இலங்கை அரசு நியாயப்படுத்துகிறது. இந்தச் சட்டத்தின் கீழ், பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் குடியேற்றங்களைத் தொடங்குவதற்கு அரசு நிலத்தைக் கையகப்படுத்தப்படலாம். இதுமுரண்பாட்டின் வரலாற்று வேர்களில் முன்னர் காட்டப்பட்டுள்ளபடி, தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்களுக்கு ஆதரவாக வரலாறு முழுவதும் பணியாற்றியுள்ளது. கொலனிய கால நிலச் சட்டங்கள் போருக்குப் பிந்தைய புனரமைப்பில் மீண்டும் முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன,குறிப்பாக இராணுவமயமாக்கலுக்கான சட்டரீதியான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தன.

இந்த நிலங்களில், இராணுவக் கட்டமைப்புகளை பராமரிப்பதுடன், பாதுகாப்புப் படையினர் விவசாயம், உணவு பதப்படுத்துதல், உள்;ர் சுற்றுலாப் பயணிகளுக்கு வீடுகள் வழங்குதல் போன்றவற்றில் ஈடுபட்டனர். இவற்றில் சில நிலங்கள் குடியிருப்பு பகுதிகள் நிறைந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும்,யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடக்குப் பகுதியான வலிகாமத்தில் 4,589 ஏக்கர் பரப்பளவில் மிகவும் வளமான நிலப்பரப்பு பல தசாப்தங்களாக இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. கடற்படையினரும் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். முள்ளிக்குளம் மற்றும் மயிலிட்டி ஆகியவை வளமான மீனவக் கிராமங்களாகும், அந்த நிலங்களுக்குள் பூர்வீக குடிமக்கள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புப் படையினர் சுற்றுலாத் துறைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன், காங்கேசன்துறையிலும் சுண்டிக்குளத்திலும் சுற்றுலா விடுதிகளை கட்டினர். பிராந்தியம் முழுவதும் உணவகங்கள்,சிறிய பல்பொருள் அங்காடிகள், முடிதிருத்தும் கடைகள் ஆகியவற்றை இராணுவம் நடாத்தியது. இவற்றில் சில வடக்கையும் தெற்கையும் இணைக்கும் ஏ9 பிரதான வீதியை ஒட்டி அமைந்துள்ளன. தினமும் ஆயிரக்கணக்கான உள்;ர் மற்றும் வெளியூர் சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் சாலை இது. இவை தவிர, இராணுவம் பெரிய அளவிலான பண்ணைகள் மற்றும் போர் அருங்காட்சியகங்களை நடத்தியது. இந்த வணிக-இராணுவ கூட்டிணைவின் ஒரு பகுதியாக பல நிரந்தர கட்டமைப்புகள் கட்டப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் இராணுவத்தால் நடத்தப்படும் பன்னிரண்டு பண்ணைகளில் பயறு வகைகள், சோளம், நிலக்கடலை போன்றவை நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயிரிடப்பட்டு சுமார் 2,500 பேர் இந்தப் பண்ணைகளில் பணிபுரிகின்றனர் என்பதை அரசாங்கம் பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளது.இராணுவத்தினர் விவசாயம் மற்றும் பல தொழில்களில் ஈடுபட்டுள்ளதால், இந்தப் பகுதிகளில் மீள்குடியேறியுள்ள தமிழர்களுக்கு வருமானம் கிடைப்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. விவசாயம் செய்யத் தொடங்கிய சிறிய எண்ணிக்கையிலான தமிழ் விவசாயிகளால் இராணுவப் பண்ணைகளின் குறைந்த விலையில் போட்டியிட முடியாத நிலை இருந்தது. மலிவான உழைப்பு மற்றும் பெரிய அளவிலான விவசாயம் காரணமாக இராணுவம் குறைந்த விலையில் இந்த தயாரிப்புகளை வழங்க முடிந்தது. போருக்குப் பிந்தைய மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட இராணுவ ஒத்துழைப்புதான் இராணுவத்தை வடக்கு மற்றும் கிழக்கின் ஒருங்கிணைந்த அங்கமாக மாற்றியது.

அரசமற்றும் மனித பாதுகாப்புடன் வளர்ச்சியை இணைப்பதில்,அமெரிக்க அபிவிருத்தி நிறுவனம் (யுஎஸ்எயிட்) பிராந்தியத்தில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களை ஊக்குவிக்கும் அதே வேளையில் நிலைபேறான வளர்ச்சி என்ற பெயரில் பல சமூக மேம்பாட்டு திட்டங்களுக்கு உதவியுள்ளது. இவற்றில் பல "ஜனநாயக சமூகங்களில் மேலெழுகைக்கான உதவி" என்ற பெயரில் வழங்கப்பட்டவையாகும். இராணுவத்துடன் இணைந்த பல அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியுதவியை இந்நிறுவனம் வழங்கியுள்ளது. இதனூடாக நேரடியாகவே அபிவிருத்திச் செயற்பாட்டில் இராணுவத்தின் பங்களிப்பை, இன்னும் தெளிவாகச் சொல்வதென்றால் அபிவிருத்தியின் இராணுவமயமாக்கலுக்கான முழுமையான ஆதரவை அமெரிக்கா வழங்கி வந்துள்ளது.

அபிவிருத்தி மற்றும் ஜனநாயகமயமாக்கல் ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் ~தாராளவாத சமாதான/ மாதிரியானது பூகோள அரசியலின் ஒரு பகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. யுஎஸ்எயிட் இலங்கைக்கு வழங்கிய 13.7 மில்லியன் அமெரிக்க டாலர் மானியமானது,ஜனநாயகமயமாக்கலுக்கான திட்டத்தை செயல்படுத்துவதை நோக்காகக் கொண்டது. இந்த நிதி டெவலப்மென்ட் ஆல்டர்நேட்டிவ். என்ற தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இது அமெரிக்க மத்திய புலனாய்வு முகமையுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளது.இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று, இலங்கை மீதான சீனாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதாகும், அதை "ஜனநாயகத்தை வலுப்படுத்தல்" என்ற போர்வையில் அமெரிக்கா செய்ய முனைந்தது. இலங்கையின் அரசியல் பொருளாதாரம் அதே தீவில் போட்டியிடும் உலகளாவிய அரங்காடிகளாலேயே தீர்மானிக்கப்படுகிறது என்பதை இது இன்னொருமுறை உறுதிப்படுத்தியது. சர்வதேச அரங்காடிகளின் நலன்களே இது மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு செயல்முறைகளைத் தீர்மானித்தன. இந்தப் போட்டியே அபிவிருத்தியின் இராணுவமயமாக்கலுக்கான அங்கீகாரத்தையும் ஆதரவையும் வழங்கக் காரணமாகியது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் போருக்குப் பிந்தைய புனரமைப்புப் பணிகளின் போது,அபிவிருத்தி-பாதுகாப்பு இணைப்பு என்பது அபிவிருத்தி-இராணுவ உறவாகும். இதன் அடிப்படையான நோக்கம்,இந்தப் பிரதேசத்தை தமது பாரம்பரிய தாயகம் எனக் கூறும் ஒரு தனித்துவமான தேசமாக தமிழர்களின் கூட்டு உரிமைகளின் எஞ்சியிருக்கும் கட்டமைப்பு அடிப்படைகளை முற்றாகத் தகர்ப்பதற்கான முயற்சியாகும் என்று வைக்கப்படும் வாதத்திற்கு வலுசேர்க்கும் வகையிலேயே போருக்குப் பிந்தைய இலங்கையின் நிகழ்வுகள் இருந்தன. போருக்குப் பிந்தைய சூழலில் அபிவிருத்தி, மனித உரிமைகள் மற்றும் மனிதப் பாதுகாப்பு பற்றிய கதையாடல்களை பகுப்பாய்வு செய்தால், உலகெங்கிலும் உள்ள புவி மூலோபாய நோக்கங்களை அங்கீகரிப்பது முக்கியம். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் போருக்குப் பிந்தைய புனரமைப்பு அரசியல் பொருளாதாரமும் இதற்கு விலக்கல்ல.

இலங்கையில் தமிழர்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட போருக்குப் பிந்தைய அபிவிருத்தி மற்றும் ஜனநாயகமயமாக்கலின் அரசியல் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள புவிசார் அரசியலுடன் உள்ளார்ந்த முறையில் பின்னிப்பிணைந்துள்ளது. இந்த அரசியல் நலனுக்கு உட்பட்டே அனைத்து அரங்காடிகளும் தங்கள் பங்களிப்பை நல்கினார்கள். குறிப்பாக இலங்கையின் மனித உரிமைகள் குறித்துக் கேள்வி எழுப்பிய மனித உரிமை அமைப்புகள், சிவில் சமூகம் அனைத்தும் நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்குலகின் ஆதிக்க நலன்களுக்கு சேவை செய்தன என்பதே இலங்கையின் அனுபவமாகும்.

இராணுவமயமாக்கல் பற்றிய ஆய்வுகள் நீண்ட காலமாக இராணுவத்தின் விரிவடையும் பொருளாதாரத் தடம் பற்றிய ஆபத்துகளை நிரூபித்தும் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன, குறிப்பாக அது பொதுவாக தேசபக்தி மற்றும் தேசியவாத கதைகளால் மறுவரையறை செய்யப்பட்டு சட்டப்பூர்வமாக்கப்படும் போது மற்றும் அது 'இடங்கள், இடங்கள், சூழல்கள் மற்றும் நிலப்பரப்புகளை வடிவமைக்கும் தன்மையுடையனவாய் மாறி விடுகின்றன. இராணுவ மயமாக்கப்பட்ட சொல்லாட்சிகளில் உள்ளார்ந்த அனைத்து நோக்கங்களும் - அவர்களின் தியாகங்களை மதிப்பது, வணக்கத்திற்கு தகுதியான ஹீரோக்களாக்குவது,போன்ற பல்வேறு முயற்சிகள் இதில் அடங்கும்.

## கடிதங்கள்

### காவோலைக்கு மேல் கற்கள் போடப்பட்டு அமைக்கும் வீதி



வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட மீசாலை அல்லாரை பிரதான வீதி தற்போது புனரமைக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியை புனரமைக்கும் போது வீதியின் குறிப்பிட்ட சில இடங்களில் ஒரு அடி ஆழமுடைய நீளமான குழிகள் தோண்டப்பட்டு அதற்குள் காவோலைகள் போடப்பட்டு அதற்கு மேலாக கற்கள் போடப்பட்டு வீதி புனரமைப்பது பொதுமக்களிடையே ஆச்சரியத்தையும் விமர்சனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான முறையில் பிரதான வீதி ஒன்று புனரமைக்கப்படுமா என்று மக்கள் விசனத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினர் உடனடியாக உரிய நடவடிக்கை எடுப்பதோடு அதற்கான விளக்கத்தையும் பொது மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என சாவகச்சேரி நகர சபை முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பு.கஜிந்தன்

### தேசிய தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப விருதுகள் 2024

# தங்க விருதை வென்றது ComBank Digital







கொமர்ஷல் வங்கி, 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப (ICT) விருதுகள் நிகழ்வில் தேசிய சிறந்த தர மென்பொருள் விருதுகளில் (NBQSA)> விருப்பத்துக்குரிய தங்க விருதை வென்றுள்ளது.

கொமர்ஷல் வங்கியானது சில்லறை, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் (SME) மற்றும் பெருநிறுவன வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்யும் வங்கியின் முதன்மையான டிஜிட்டல் பிரிவான ~ComBank Digital|-க்காக மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த 'வங்கியியல், காப்புறுதி மற்றும் நிதி நுகர்வோர்' பிரிவில் தங்கத்தை வென்றுள்ளது.

மேலும் வங்கியானது அதே பிரிவில் உள்ளக வலையமைப்பில் இருந்து வாடிக்கையாளர்களுக்கு தேவையான தகவல்களை வழங்க 3,000 க்கும் மேற்பட்ட வங்கிக்கிளைகளின் ஊழியர்களுக்கு உதவும் செயற்கை நுண்ணறிவு (AI) இயங்கு தளமான ~Jimi GPT| க்காக தகுதிகாண் (Merit) விருதை பெற்றுள்ளது.

ComBank Digital வென்றுள்ள விருது குறித்து கருத்து தெரிவித்த கொமர்ஷல் வங்கியின் பிரதம தகவல் அதிகாரி சுமுது குணவர்தன, 'இந்த தேசிய ICT விருதை வென்றது, சிறப்பான வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதில் ComBank Digital இன் வெற்றிக்கு ஒரு சக்திவாய்ந்த சான்றாகும். எங்கள் செயலியானது (app) இணையற்ற வசதியையும் பாதுகாப்பையும் வழங்குவதுடன் வாடிக்கையாளர்கள் அவர்களின் நிதியினை எளிதாக கையாள்வதற்கான வழிமுறையை வழங்குகிறது. இந்த அங்கீகாரமானது, கொமர்ஷல் வங்கியில் டிஜிட்டல் வங்கிச் சேவைக்கான புதிய தரங்களை அமைப்பதற்கும் தொடர்ச்சியாக புதுமைகளை உருவாக்குவதற்கும், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு எப்போதும் சிறந்த சாத்தியமான அம்சங்கள் மற்றும் சேவைகளுக்கான அணுகலை உறுதி செய்வதற்கும் ஊக்குவிப்பினை வழங்குகிறது. எங்களது 1.5 மில்லியன் வாடிக்கையாளர்களை தளத்திற்கு வரவேற்க உள்ள நிலையில் இவ்விருதானது மிகவும் உற்சாகத்தை தருகிறது. இது எங்கள் பயணத்தின் உண்மையான மைல்கல் ஆகும்.

இலங்கையில் அதிகம் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் வங்கித் தளமான ComBank Digital ஒரு மாதத்திற்கு 5 மில்லியனுக்கும் அதிகமான பரிவர்த்தனைகளை மேற்கொள்கிறது. இதற்கு பொறுப்பாக இணைய செயலி மற்றும் மூன்று சொந்த மொபைல் செயலிகள் (ios, Android மற்றும் Huawei) மூலம் வழங்கப்படும் ComBank Digital ஆனது, மேசை கணினிகள், மடி கணினிகள், டேப்கள் மற்றும் ஸ்மார்ட் கைப்பேசிகள் போன்ற அனைத்து சாதனங்களிலும்அணுகக் கூடியதாக உள்ளதுடன் வங்கித் தேவைகள், செல்வ முதலீடு, பணம் செலுத்துதல் மற்றும் வாழ்க்கை முறை போன்ற செயல்பாடுகளை உள்ளடக்கியதாக உள்ளது.

இந்நிலையில், 'Jimi GPT' க்கு வழங்கப்பட்டுள்ள இந்த தகுதிகாண் விருதானது, 'Gen Z' வங்கியாளருக்கான பணிச் சூழலை உருவாக்குவதில் செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்படும் அறிவின் பங்கை அங்கீகரிக்கிறது, அதே வேளை செயல்பாட்டு திறன், தகவல்கள் துல்லியமாக வழங்கப்படுவதையும் அதன் வேகத்தையும் மேம்படுத்துகிறது. அத்துடன் 'Jimi GPT' ஆனது வங்கிக் கிளை ஊழியர்கள், தகவல்களை அணுகுவதற்கான நேரத்தை வெறும் 30 வினாடிகளாக குறைக்கிறது.

### Techno 2024 நிகழ்வில் தொழில்நுட்ப புத்தாக்கங்களை

# வெளிப்படுத்தியது SLT-MOBITEL




SLT-MOBITEL, வருடாந்த Techno கண்காட்சியின் பிரதான அனுசரணையாளராக தொடர்ந்தும் இணைந்திருந்தது. இந்நிகழ்வை இலங்கை பொறியியலாளர் நிறுவகம் (IESL) ஏற்பாடு செய்திருந்தது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் 36 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. தொழில்நுட்ப முன்னேற்றங்களை வெளிப்படுத்தியிருந்ததுடன், நாட்டில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதாக அமைந்திருந்தது.

"Engineering: The Path to Prosperity," எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற Techno 2024 கண்காட்சியை, மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப பீடாதிபதியும், சிவில் பொறியியல் சிரேஷ்ட பேராசிரியரும், பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் அங்கத்தவருமான பேராசிரியர் மலிக் ரணசிங்க, இலங்கை மின்சார சபையின் தவிசாளர் திலக் சியம்பலாபிட்டிய ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். இந்நிகழ்வில் SLT-MOBITEL சார்பாக SLT குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க, SLT பிரதம செயற்பாட்டு அதிகாரி பிரபாத் அம்பேகொட, SLT-MOBITEL பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க மற்றும் மொபிடெல் பிரதம செயற்பாட்டு அதிகாரி சுதர்ஷன கீகனகே ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

பிரதான அனுசரணையாளர் எனும் வகையில் SLT-MOBITEL இனால் பரந்த பிரிவுகளில் பெருமளவு தீர்வுகள் மற்றும் சேவைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இதில் SLT-MOBITEL Enterprise, SME solutions, digital products, E-Teleshop, SLT-MOBITEL Embryo மற்றும் மொபிடெலின் 5G விளக்கமளிப்பு ஆகியன அடங்கியிருந்தன. இந்நிகழ்வில் பங்கேற்றிருந்ததனூடாக, இலங்கையில் புத்தாக்கம் மற்றும் தொழினுட்ப முன்னேற்றத்தை முன்னெடுப்பதற்கான அதன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருந்தது.

SLT இன் பிரதம செயற்பாட்டு அதிகாரி பிரபாத் அம்பேகொட இந்நிகழ்வின் மூன்றாம் நாளான ஒக்டோபர் 13ஆம் திகதி நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். பொறியியல் மற்றும் தொழினுட்ப சமூகத்துக்கு SLT-MOBITEL இன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக அவரின் பிரசன்னம் அமைந்திருந்தது.

தொழிற்துறை நிபுணர்களுடன் SLT-MOBITEL க்கு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு கண்காட்சி சிறந்த வாய்ப்பாக அமைந்திருந்தது. தமது பிந்திய விளம்பரங்களை காட்சிப்படுத்தவும், புதிய வியாபார வாய்ப்புகளை கண்டறியவும் ஏதுவாக அமைந்திருந்தது. இலங்கையில் புத்தாக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான வழிகோலியாக திகழ்கின்றமையை நிறுவனத்தின் அனுசரணை மீள உறுதி செய்திருந்தது.

Techno 2024 இல் பங்கேற்றிருந்தமைக்கு மேலதிகமாக, SLT-MOBITEL இன் அனுசரணையில் முன்னெடுக்கப்படும் IESL Robo Games 2024க்கான பதிவுகளும் இந்நிகழ்வின் போது முன்னெடுக்கப்பட்டது. மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கணனி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் பிரிவினால் IESL உடன் இணைந்து Robo Games ஏற்பாடு செய்யப்படுகின்றன. இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையின் தொழினுட்ப முன்னோடி எனும் வகையில், எதிர்கால நிபுணர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக, ரொபோட்டிக்ஸில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கான முக்கியத்துவத்தை SLT-MOBITEL உணர்ந்துள்ளது.

Techno 2024 இல் SLT-MOBITEL'இன் பங்கேற்பினூடாக, இலங்கையில் விறுவிறுப்பான மற்றும் புத்தாக்கமான தொழில்நுட்ப சூழலை ஏற்படுத்துவதில் காண்பிக்கும் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தேசத்தின் சுபீட்சத்தை வழிநடத்திச் செல்லக்கூடிய புதிய தலைமுறை பொறியியலாளர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதில் தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதில் நிறுவனம் தொடர்ந்தும் முன்னிலையில் திகழ்கின்றது.



## காலக்கெடு

எவரும் முற்றிலும் அறியார்
சமுத்திரங்களின் ஆழத்தில்
நிறைந்த இரகசியங்களை,
மணலின் அடியில் புதைந்ந பல உலகங்களை,
மனிதன் அறியாத உயிர்களின் துடிப்புககளை...

காடுகள், காலத்தின் சாட்சிகள்,
பழமையானவை, தம் கதைகளை மூடி வைத்தவை,
மரங்களின் சுவாசம்,பூமியின் ஆசுவாசம்
மலைகள், உயர்ந்து விண்ணை நாடுவதோ,
பூமியின் கட்டுப்பாட்டினின்று தப்பி திமிறும் ஆசை
சிகரங்களுள் குமுறும் எரிமலைகளோ,
ஆதியும் அந்தமுமாய் தகிக்கும் ஆற்றல்

எண்ணிப்பார்த்தால் மனிதன் சிறியவன்,
ஆனால் அழித்தல் நிறைந்தவன்,
பூமியின் வளங்களைவாட்டும் சின்னகுழந்தை,
அடங்காதசுயநலத்தில் ஆடும் எங்களை,
கடிகாரம் எச்சரிக்குது!

நாளை ஒன்றை நிலை நாட்ட
நம்மை மாற்றி வாழ்வதே வழி,
இயற்கை விதித் தகெடு
கண்முன்னே காலனாய் மாறுமுன்னர்
மனிதா, விழித்தெழு...



அருவி



## சிற்றிலாடுதல்

வீட்டின் பின்புறத்தில்
மரம் சூழ் தண்நிலத்தில்
புனலெடுத்துப் புது மண் தேர்வு செய்து
ஆளுக்கொரு வீடு
அழகழகாய் செய்து வைச்சோம்

மண்ணால் அடுப்பு செய்து
சிரட்டையை பானையாக்கி
மண் சோறு சமைச்சு வைச்சு
செவ்வரத்தை குழம்பு வைச்சு
வாழையிலையை விரிச்சு வச்சு
பந்தி நடத்திவைச்சோம்

மாமி மகளுமல்ல
மாமன் மகளுமல்ல
மச்சாள் என அழைத்து
மனமகிழ் பேசிடுவோம்

உச்சந் தொடவன்பை
உதட்டு வழி பகிர்ந்திடுவோம்
உரிமையாய்ச் சில்மிஷங்கள்
ஓரவணம் செய்திடுவோம்

மண்சோறு என்றாலும்
மனமதனால் பதைத்ததில்ல
மாயங்கள் இல்லாமல்
மண் தின்று விளையாடினோம்

பக்கத்து வீட்டுப் பட்டியெல்லாம்
புளியங்காய் கொண்டுதர
சுவைத்துச் சுகம் பெறுவோம்
இன்னும் சுவை நீங்கலையே

சீலைக் கொண்டையதைச்
சீவி சிங்காரித்து
சூடிய பூ வாசம்
இன்னும் தான் போகலையே.



தமிழ்க்கீரன்
கல்மடு கல்குடா.



## குஞ்சி நோனா

வீட்டின் பக்கத்தில் இருந்த
காட்டுப் பாதையின் ஊடாகத்தான்
வெளியேறி வருவாள்
ஞாயிறு தோறும்
குஞ்சி நோனா.

அம்பாறை நகரில்
ஞாயிறு மட்டுமே
சந்தை என்பதால்
கூடையுடன் உர வேக்குமாக
சாமான் வேண்டுவாள் அவள்.

தலையிலும் கையிலுமாக
சுமக்கும் பாரம்
அவள் உடையாத நடையில்
தளம்பாமல் இருக்கும்.

ஞாயிறு தோறும்
காலையிலும் மதியத்திலும்
அம்மா கொடுக்கும் தேநீருக்கு
சீனிக்கதழி வாழைப்பழங்கள்
பண்டமாற்று முறையாகுவது
வழமை.

இந்த ஞாயிறும் வந்த நோனா
புத்தபகவானின் சிலையை
அன்பேடு தந்து நிற்க
கைமாறாய்
சாமியறையில் இருந்த
என் குட்டி பிள்ளையாரை அம்மா
கைமாற்றினாள்.

தமிழ் தெரிந்த
சிங்கள
குஞ்சு நோனாவிடம்
இப்படித்தான் சொன்னேன்.

நோனா நோனா
நான் உன் புத்தரை கவனமாக பார்க்கிறேன்
நீ
என் பிள்ளையாரை பாரும் என்று.
நோனா சிரித்தாள்
அவள் சிரிப்பில்
பிள்ளையார் அழகாகவே தெரிய
புத்த பகவானை பார்த்தேன்
அவர் அப்படியே
அமைதியாகத்தான் இருந்தார்.

இப்போதும்
அமைதியாகத்தான்
இருக்கிறார்
அவர் அவர் பாட்டில்.



காரையன் கதன்

## மலையின் மகாராணி

தத்தி தத்தி வந்து நெஞ்சில் துயில் கொண்டேன்...
மிஞ்சி மிஞ்சி செல்லும் போதெல்லாம்
கொஞ்சி கொஞ்சியே,.
விஞ்சி விஞ்சி நின்ற பேரன்பில் விளிம்பில்,.
அஞ்சி அஞ்சி நின்ற போது திடப்படுத்திய ஆறுதல்கள்,,.
என் பேராசான் அப்பா நீங்கள், அறிவுக்கு ஆதாரமாய் ஆற்றுப்படுத்தீனீர்..
நீதியாய் நேர்மையுடன் நடக்க வழிகாட்டினீர்...
கண்டக்கய்யா தான் நீங்கள் ஊருக்கு ,,..
எப்போதும் பெரியய்யா தான். வாழ்வில் அடம் பிடித்து அழுததில்லை...
வேண்டியதெல்லாம் அள்ளி தந்தீர்,,.
என்னை சிகரத்தில் வைத்து கொண்டாடினீர்,,
விழுமியத்தை விருப்பத்தோடு சொல்லித்தந்தீர்..,
கம்பீர மீசையும் நிமிர்ந்த நடையும்...,,
வெள்ளைக்கார துரையோ என எண்ண வைத்ததே!
பிழைகளை சரி செய்ய தவறாத கவனங்கள் என் மீது,,,
ஆற்றாமையை அகராதாதியில் அகற்றினீர்...
சான்றாமையை சான்றுபடுத்தி சீர் செய்தீர்...
அன்பு திரட்டிய மொத்த உருவமாய் அப்பா நீங்கள்..,,
ஆசை ஆசையாய் இருக்கிறது...
அப்பா,அப்பா என்றழைக்க,,,,
ஓசையாய் துடிக்கிறதுநெஞ்சம்...,,
பசையாய் ஒட்டிகொள்கிறது இரத்த பந்தம்,,,
மகாராணி போல வளர்த்தீர்கள்,....
உம் மகள் இன்னும் மகாராணி தான்...
மலையின் மகாராணி,,.
கதிரவனை தின்ற தாகத்தில் உம் மீது கொண்ட நேசங்கள் தீராமல் தொடரும்...
நீள காற்சட்டையும் அழகிய சப்பாத்தும் கையில் குடையும் ஏந்தி நடந்த
ஒற்றையடிப்பாதைகளுடன் அந்த தேயிலைச்செடிகள்...
தேயிலை தேசம் தந்த செம்மல் என்று
பட்டம் தந்து விட்டதே!
பெரிய கணக்கபிள்ளை தான் நீங்கள்
ஒரு போதும் எனக்கு கணக்கு பார்க்காமல் கொடையளித்தீர்கள்..,.
கருணை காருண்யம் எல்லாம் படையாய்
திரண்டிருப்பது உம் மனதில் தானே!
கெஞ்சி கெஞ்சி நிற்கிறேன் மீண்டும்
மகளாக பிறக்க வேண்டும் என,,,,,,
கொஞ்சி கொஞ்சி மடியில் இருப்பேன்,...,



சசிரேக்கா
சிவப்பிரகாசம்,
உடப்புசல்லாவை



ஜார்ஜியா

உணவகத்தில் இருந்து

# 12 இந்தியர்களின் சடலங்கள் மீட்பு



ஜார்ஜியாவில் இந்திய உணவகம் ஒன்றில் பணியாற்றி வந்த 12 இந்தியர்கள் சடலாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கார்பன் மோனாக்சைடு விஷவாயு தாக்கி இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

ஐரோப்பிய நாடான ஜார்ஜியாவின் மலைப்பகுதியான குடவுரி என்ற இடத்தில் சொகுசு விடுதி உள்ளது. இதில் இந்திய உணவுகளை பரிமாறும் உணவகம் உள்ளது. இதில் வடஇந்திய தொழிலாளர்கள் 12 பேர் பணியாற்றி வந்தனர். இவர்கள் விடுதியின் இரண்டாவது மாடியில் உள்ள அறைகளில் தங்கியிருந்தனர்.

இந்நிலையில் இவர்கள் தங்கள் அறைகளில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். அவர்கள் உடலில் காயம் எதுவும் இல்லை. அவர்களின் படுக்கை அறைகளுக்கு அருகிலேயே மூடிய பகுதிக்குள் ஜெனரேட்டர் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (13) இரவு, மின் விநியோகம் துண்டிக்கப்பட்டதும் ஜெனரேட்டர் தானாக இயங்கியது. அப்போது கார்பன் மோனாக்சைடு விஷவாயு வெளியாகி இவர்கள் இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. எனினும், காரணத்தை துல்லியமாக உறுதிசெய்ய தடயவியல் மருத்துவப் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.


மேலும் அலட்சியத்தால் உயிரிழப்பை ஏற்படுத்தியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரிக்கப்படுகிறது.

உயிரிழந்த இந்தியர்களின் குடும்பத்தினருக்கு திபிசிலியில் உள்ள இந்திய தூதரகம் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளது. இறந்தவர்களின் உடல்களை இந்தியாவுக்கு விரைந்து அனுப்ப முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் செய்ய உறுதிபூண்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

நைஜீரியா

கூட்ட நெரிசலில் சிக்கி

## சிறுவர்கள் உட்பட 30 பேர் பலி



நைஜீரியாவில், பாடசாலை நிகழ்ச்சி ஒன்றில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, சிறுவர்கள் உட்பட 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியா நாட்டின் ஒயொ மாகாணம், பசொரன் நகரில் உள்ள பாடசாலை ஒன்றில், 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இந்நிலையில், கிறிஸ்துமஸ் பண்டிகை, ஆண்டு நிறைவையொட்டி, அந்த பாடசாலையில், புதன்கிழமை (18), கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த நிகழ்ச்சியை கண்டுகளிக்க மாணவ, மாணவியரின் குடும்பத்தினரும் வந்திருந்தனர். நிகழ்ச்சியின்போது பரிசு பொருட்களும் கொடுக்க ஏற்பட்டு செய்யப்பட்டிருந்தது.

இதனால், நிகழ்ச்சியை காணவும், பரிசு பொருட்களை வாங்கவும் பாடசாலையில் கூட்டம் குவிந்தது. அப்போது, எதிர்பாராத விதமாக கூட்ட நெரிசல் ஏற்பட்டது

ஜமைக்கா

சூப்பர் மார்க்கெட்டில் துப்பாக்கி சூடு

## தமிழக இளைஞன் பலி

ஜமைக்காவில் உள்ள சூப்பர் மார்க்கெட்டில் நடந்த துப்பாக்கி சூட்டில் தமிழக இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஜமைக்கா நாட்டின் பிராவிடன்ஸ் தீவில், தென்காசி மாவட்டம் - சுரண்டையைச் சேர்ந்த இளைஞன், சூப்பர் மார்க்கெட் ஒன்றை நடத்தி வருகிறார். இங்கு, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த விக்னேஷ், சுந்தரபாண்டி, சுடலை மணி, ராஜாமணி ஆகிய 4 பேர் பணியாற்றி வந்தனர்.

இந்நிலையில், நேற்று (19) அதிகாலை 1.30 மணி (ஜமைக்கா நேரப்படி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணி) அளவில் கொள்ளையர்கள் சூப்பர் மார்க்கெட்டில் புகுந்து, பணத்தை கொள்ளையடித்து விட்டு, துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர்.



தமிழ்நாடு

அம்பேத்கர் விவகாரம்

## தமிழகத்திலும் ஆர்ப்பாட்டம்



அம்பேத்கரை அவமதித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து திமுக சார்பில், நேற்று (19), தமிழ்நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதேவேளை, விசிகவினர், நேற்று (19) ஆங்காங்கே ரயில் மறியல் போராட்டம் நடத்தியுள்ளனர்.

அத்துடன், அம்பேத்கரை இழிவு படுத்திய அமித்ஷாவை உள்துறை அமைச்சர் பொறுப்பில் ஒரு வினாடியும் நீடிக்க தகுதியற்றவர். அவரை அமைச்சரவையில் இருந்து வெளியேற்ற வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி தமிழ்நாடு முழுவதும் மாவட்ட, மாநகர, நகர, பேரூர் மற்றும் ஒன்றியத் தலைநகர்களில், இன்று (20), ஆர்பாட்டத்தில் ஈடுபடும் என்று, அக்கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அறிவித்துள்ளார்.

அம்பேத்கர் பற்றிய அமித் ஷாவின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் மற்றும் இண்டியா கூட்டணிக் கட்சிகளும், அமித் ஷா கருத்தை எதிர்க்கட்சிகள் திரித்து சர்ச்சையாக்குவதாகக் கூறி பாஜகவும் நேற்று (19) காலை பாராளுமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டன.

இதனால் பாராளுமன்ற வளாகத்தில் சலசலப்பு நிலவியது.

இதேவேளை, காங்கிரஸ் கட்சியினரும், பாராளுமன்ற வளாகத்தில் உள்ள அம்பேத்கர் சிலை அருகே போராட்டத்தில் ஈடுபட்டனர். ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் பங்கேற்று அமித் ஷாவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

ஒடிசா

திருமணத்திற்கு மறுத்த

## காதலியின் வீட்டை கொளுத்திய காதலன்

ஒடிசா மாநிலத்தில், திருமணத்திற்கு மறுத்ததால் காதலியின் வீட்டை, இளைஞன் ஒருவர் தீ வைத்து எரித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒடிசா மாநிலம், பஹ்ட்ராக் மாவட்டம், வித்யார்பூர் கிராமத்தை சேர்ந்த ஜோதி ராஜன் தாஸ் (வயது 28) என்பவரும், அண்டை கிராமமான ஆனந்த்பூரை சேர்ந்த இளம்பெண்ணும் காதலித்துள்ளனர்.

இதனிடையே, தன்னை திருமணம் செய்துகொள்ளும்படி காதலியிடம் குறித்த இளைஞன் கேட்டுள்ளார். திருமணத்திற்கு மறுத்தால் தனிமையில் இருந்த புகைப்படங்கள், வீடியோக்களை சமூகவலைதளத்தில் பதிவிட்டுவிடுவேன் என மிரட்டியுள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த இளம் பெண், குறித்த இளைஞன் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த இளைஞன் தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக, இளம்பெண் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்ததால் ஆத்திரமடைந்த குறித்த இளைஞன் , புதன்கிழமை (18), தனது காதலியின் வீட்டிற்கு சென்றுள்ளார்.

மேலும், திருமணம் செய்துகொள்ள மறுத்ததால் வாக்குவாதத்தில் ஈடுபட்ட ராஜன், தனது காதலியின் வீட்டிற்கு தீ வைத்துள்ளார்.

துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில்

# முதலாமிடத்துக்கு முன்னேறினார் றூட்



சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு இங்கிலாந்தின் ஜோ றூட் முன்னேறியுள்ளார்.

நியூசிலாந்துக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் 86 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே இரண்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி முதலாமிடத்தை றூட் அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜோ றூட், 2. ஹரி ப்றூக், 3. கேன் வில்லியம்சன், 4. யஷஸ்வி ஜைஸ்வால், 5. ட்ரெவிஸ் ஹெட், 6. கமிந்து மென்டிஸ், 7. தெம்பா பவுமா, 8. டரைல் மிற்செல், 9. றிஷப் பண்ட், சௌட் ஷகீல்.

மேற்படி போட்டியில் ஆறு விக்கெட்டுகளைக் கைப்பற்றிய நியூசிலாந்தின் மற் ஹென்றி, ஒன்பதாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜஸ்பிரிட் பும்ரா, 2. ககிஸோ றபாடா, 3. ஜொஷ் ஹேசில்வூட், 4. பற் கமின்ஸ், 5. இரவிச்சந்திரன் அஷ்வின், 6. இரவீந்திர ஜடேஜா, 7. மற் ஹென்றி, 8. நேதன் லையன், 9. பிரபாத் ஜெயசூரிய, 10. நொமன் அலி.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. மெஹிடி ஹஸன், 3. இரவிச்சந்திரன் அஷ்வின், 4. ஷகிப் அல் ஹஸன், 5. மார்கோ ஜன்சன்.

இதேவேளை மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் 77 ஓட்டங்களைப் பெற்ற பங்களாதேஷின் மெஹிடி ஹஸன், சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

மொஹமட் நபி, 2. சிகண்டர் ராசா, 3. மெஹிடி ஹஸன் மிராஸ், 4. ரஷீட் கான், 5. ஜெர்ஹார்ட் எரஸ்மஸ்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், 2. றோஹித் ஷர்மா, 3. ஷுப்மன் கில், 4. விராட் கோலி, 5. ஹரி டெக்டர், 6. டரைல் மிற்செல், 7. ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ், 8. ஷே ஹோப், 9. பதும் நிஸங்க, 10. சரித் அசலங்க.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ரஷீட் கான், 2. ஷகீன் ஷா அஃப்ரிடி, 3. கேஷவ் மஹராஜ், 4. குல்தீப் யாதவ், 5. பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ், 6. மகேஷ் தீக்‌ஷன, 7. ஜஸ்பிரிட் பும்ரா, 8. மொஹமட் சிராஜ், 9. அடம் ஸாம்பா, 10. ஜொஷ் ஹேசில்வூட்.

இந்நிலையில் பங்களாதேஷுக்கெதிரான முதலாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில் இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றிய மேற்கிந்தியத் தீவுகளின் அகீல் ஹொஸைன், பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் நான்காமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி முதலாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

அகீல் ஹொஸைன், 2. அடில் ரஷீட், 3. வனிது ஹசரங்க, 4. அடம் ஸாம்பா, 5. மகேஷ் தீக்‌ஷன, 6. ரவி பிஷ்னோய், 7. ரஷீட் கான், 8. அர்ஷ்டீப் சிங், 9. குடகேஷ் மோட்டி, 10. நாதன் எலிஸ்.

இதேவேளை தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டாவது போட்டியில் 31 ஓட்டங்களைப் பெற்ற பாகிஸ்தானின் பாபர் அஸாம், துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் ஏழாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

இந்நிலையில் இப்போட்டியில் 117 ஓட்டங்களைப் பெற்ற தென்னாபிரிக்காவின் றீஸா ஹென்ட்றிக்ஸ், 15ஆம் இடத்திலிருந்து ஆறு இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ட்ரெவிஸ் ஹெட், 2. பில் ஸோல்ட், 3. திலக் வர்மா, 4. சூரியகுமார் யாதவ், 5. ஜொஸ் பட்லர், 6. பாபர் அஸாம், 7. யஷஸ்வி ஜைஸ்வால், 8. மொஹமட் றிஸ்வான், 9. றீஸா ஹென்ட்றிக்ஸ்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஹர்திக் பாண்டியா, 2. டிபேந்திர சிங் ஐரீ, 3. லியம் லிவிங்ஸ்டோன், 4. மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், வனிது ஹசரங்க.




புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத் தொடர்

## சம்பியனான திக்ரா 07 ஸ்

■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கால்பந்தாட்டத் தொடரில் திக்ரா 07 ஸ் அணி சம்பியனானது.

சாஹிரா கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற அணிக்கு ஏழு பேர் கொண்ட, 24 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் அல் நாஸர் அணியை வென்றே திக்ரா 07 ஸ் சம்பியனானது.

இத்தொடரின் சிறந்த வீரராக அல் நாஸர் அணியின் எம். முரா தெரிவானதோடு, தொடரின் சிறந்த கோல் காப்பாளராக திக்ரா 07 ஸ் அணியின் வீரர் முஹம்மது முபாரக் தெரிவானார்.



நியூசிலாந்துக்கெதிரான தொடருக்கான

## இலங்கைக் குழாம் அறிவிப்பு



நியூசிலாந்துக்கெதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான குழாமை இலங்கை பெயரிட்டுள்ளது.

இறுதியாக இலங்கை பங்கேற்ற இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரான நியூசிலாந்துக்கெதிரான தொடருக்கான இலங்கைக் குழாமில் இடம்பெற்றிருந்த டுனித் வெல்லலாகே மாத்திரம் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: சரித் அசலங்க (அணித்தலைவர்), பதும் நிஸங்க, குசல் மென்டிஸ், குசல் பெரேரா, அவிஷ்க பெர்ணாண்டோ, கமிந்து மென்டிஸ், தினேஷ் சந்திமால், பானுக ராஜபக்‌ஷ, வனிது ஹசரங்க, மகேஷ் தீக்‌ஷன, ஜெஃப்ரி வன்டர்சே, சமிந்து விக்ரமசிங்க, மதீஷ பத்திரண, நுவான் துஷார, அசித பெர்ணாண்டோ, பினுர பெர்ணாண்டோ.

பாகிஸ்தான் எதிர் தென்னாபிரிக்க தொடர்

## காயமடைந்த இருவர் இணைப்பு

பாகிஸ்தானுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான தென்னாபிரிக்கக் குழாமில் காயமடைந்த கேஷவ் மஹராஜ், வியான் முல்டர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில் குழாமுக்கு முதற்தடவையாக வேகப்பந்துவீச்சாளர் கோர்பின் பொஷ் அழைக்கப்பட்டுள்ளார். தெம்பா பவுமா அணித்தலைவராவார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 20, டிசெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.